**25.02.2025**

**அ.வ.எண். 60/2022**

**வா.சா.1 சுப்ரமணி அவர்களின் குறுக்கு விசாரணை**

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எனது நிலத்தில் வீடு கட்டியதால் வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்து அண்டைவாக்கம் கிராமத்தில் உள்ளது என்றாலும் பிரதிவாதியின் சொத்து வேடவாக்கம் கிராமத்தில் உள்ளது என்றாலும் சரிதான். எனது சொத்திற்கும் பிரதிவாதி சொத்திற்கும் இடையே கிழக்கு மேற்காக தார் சாலை செல்கிறது என்றால் சரிதான். எனது சொத்து மேற்படி தார் சாலைக்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் தெற்கு பக்கத்திலும் எனது சொத்து உள்ளது. அப்படியானால் மேற்படி தார் சாலை எனக்கு சொந்தமான நிலத்தில் உள்ளது என்றால் ஆமாம். எனது சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் தார் சாலை உள்ளது என்றால் தோராயமாக 4 செண்ட். மேற்படி தார் சாலைக்கு தெற்கு பக்கம் எனது மிகுதி நிலம் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி மிகுதி நிலம் எவ்வளவு செண்ட் உள்ளது என்றால் 6 செண்ட். அந்த மிகுதி நிலத்தின் 4 பக்க அளவுகள் எனக்கு தெரியாது. பிரதிவாதி எனது நிலத்தில் வீடு கட்டியதால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை அளவீடு செய்து பார்த்தேனா என்றால் சர்வேயர் வந்து

அளவீடு செய்து எங்களது நிலத்தில் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்று கூறினார். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தற்கான புகார் மனு அல்லது சிஎஸ்ஆர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தினை வழக்கறிஞர் ஆணையர் அளவீடு செய்வதற்கு நான் மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)